## உயிர்ப்புப் பெருவிழா

*இரண்டாவது திருவழிபாடு ஆண்டு*

2024-03-31

(*இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்.* 10:34,37-43,

*பதிலுரைப்பாடல்* 118: 1-2,16 – 17, 22-23,

*திருத்தூதர் பவுல் கொலோசையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 3:1-4,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 20: 1-9)

## திருப்பலி முன்னுரை

*அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துக்கள்.*

*உயிர்ப்பு உன்னதமானது ஆண்டவர் உயிர்த்தார் என்பதனால் தான் நம்முடைய விசுவாசம் உறுதிப் பெறுகின்றது. உயிர்ப்பிலே நம்பிக்கை கொண்ட மக்கள் நாம் அந்த நம்பிக்கை தருகின்ற வாழ்வினை சாட்சியாக்கி, நம் வாழ்வின் வழி, எல்லா ஆன்மாக்களையும் அவர் பாதத்தில் கொண்டு வந்து சேர்க்க, உறுதிபூண்டவர்களாய் பலியிலே பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*வாழ்வின் நாயகனே இறைவா!*

*தங்கள் வாழ்க்கையை உமக்காக அர்ப்பணித்து உமது செய்திப்பணியினைத் தங்கள் பணியாக தொடர்ந்து செய்யும் உம் திருச்சீடர்களை அன்பால் அரவணைத்து திருஅவையை நன்முறையில் வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*ஒளியின் இறைவா!*

*இஸ்ரயேல் மக்கள் பல்வேறு துன்பங்களைப் பெற்று பாஸ்கா கொண்டாடியது போல், உமது மக்களாகிய நாங்களும் அனைத்து துன்பங்களையும் தாங்கி உயிர்ப்பு விழாவைக் கொண்டாட வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*உலகின் மீட்பரே இறைவா!*

*உலக மக்களின் பாவங்களுக்காக சிலுவையில் உயிர்விட்டு உயிர்த்து வெற்றி கொண்டீரே; உம்மைப் போன்று தன்னலம் கருதாமல் பிறரின் தேவைகளை அறிந்து உதவி செய்து வாழ் வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*இரக்கமுள்ள இறைவா!*

*புளித்த மாவை மாற்றி புதிய நல்ல மாவை வைத்து பாஸ்கா கொண்டாடுவது போல நாங்கள் அழுக்கேறிய பழைய வாழ்க்கையை விட்டு, சுத்தமான புது வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வழிநடத்தும் இறைவா!*

*பல்வேறு பிரச்சினைகளால் துன்பப்பட்டு, நீரே ஆறுதல் எனத் தேடி வரும் மக்களுக்கு தூய ஆவியின் அருட்கொடைகளைப் பொழிந்து நல்பாதையில் வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*இரக்கம் காட்டுபவரே இறைவா,*

*உம்மோடு திருமுழுக்கிலே ஒன்றித்து, அதனை இன்று புதுப்பித்த நாங்கள் பெற்ற அருளுக்கேற்ற வாழ்க்கை நடத்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்*

*இறைவா*

*உயிர்ப்பை கொண்டாடி மகிழுகின்ற நாங்கள் உயிர்ப்பு தரும் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பினை உணர்ந்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*வழிநடத்தும் இறைவா!*

*கலகங்கள், போர்கள், வன்முறைகள் ஓய்ந்து உறவிலும், உண்மை அன்பிலும் நாங்கள் எல்லாரும் உயிர்க்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*